1974 மார்ச் 13]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆற்றுப் படுகை ஓரத்தில் இருக்கிற ஆக்கிரமிப்புக்களை அப்புறப்படுத்துவது பற்றித்தான் கேள்வி. பட்டா கொடுப்பதைப்பற்றி வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டும்.

பெரணமல்லூர் நெடுங்குளம் பகுதிகளுக்குப் பாசன வசதி.

*401 வினா—திரு பூ. எட்டியப்பன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டம், வந்தவாசி தாலுக்கா பெரணமல்லூர் நெடுங் குளம் பிர்க்கா நிலங்களுக்கு செய்யாற்றிலிருந்து பாசன வசதி கொடுக்க விண்ணமங்கலம் சமீபம் தடுப்பு அணை சம்பந்தமாக 1969ல் ஆய்வு செய்யப்பட்ட திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வந்தவாசி தாலுக்கா பெரணமல்லூர் நெடுங்குளம் பிர்க்காக்களில் உள்ள ஏரிகளுக்கு செய்யாற் றிலிருந்து பாசன வசதி அளிக்கும் திட்டம் ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டது. தண்ணீர் பற்றுக்குறை காரணமாக செய்யாற்றின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்கள் முழுமையாகப் பயன்பெற முடியாத நிலை உள்ளது. ஆகையால் மேற்சொன்ன திட்டம் தற்காலிகமாக தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

திரு. பூ. எட்டியப்பன்: இந்தத் திட்டம் இன்று நேற்று அல்ல. வெள்ளையன் ஆண்ட காலத்திலிருந்தே நீண்ட பல நாட்களாக கோரிக்கையில் இருந்து வருகிறது. இதனால் மூன்று போகங்கள் பாசன வசதி ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. தண்டறை அணைக்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. கமண்டலா நதியில் அது இருக்கிறது. செய்யாற்றுப் பாசனத்திற்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாது. ஆகவே, அரசு இதை உடனடியாகக் கவனித்து ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் தண்டறை அணையைப் பற்றிக் குறிப்பிடவில்லை. செய்யாற்றுப் பாசனத்தின் கீழ் இருக்கும் ஆயக்கட்டுகள் முழுவதும் பாசன வசதி பெறவில்லை என்ற தகவல் அரசுக்கு இருக்கிறது. ஏற்கனவே இருக்கிற ஆயக்கட்டுகள் பாசன வசதி பெறாமல் இருக்கும்பொழுது புதியதாக நிலங்களைச் சேர்த்து பாசன வசதி செய்துகொடுப்பது இயலாத காரியம் என்பதால் இது தற்காலிக மாக தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. பின்னால் அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. கே. எ. வகாப்: செய்யாற்றுக்குக் குறுக்கே ஆரணி அருகே ஒரு அணைக்கட்டு கட்டி பாசன வசதி செய்து வருகிறார்கள். சுமார் 100 ஆண்டு காலமாக அந்த அணை இருக்கிறது. அந்த அணையை அபிவிருத்தி செய்தால் வந்தவாசி தாலுகாவில் வட ஆற்காடு மாவட்டத்தில் உற்பத்தியைப் பெருக்க முடியும். ஆகவே, செய்யாற்றில்

ஆரணிக்கு அருகே உள்ள இந்த அணையை விரிவுபடுத்தி, இன்னும் அதிகமான நிலங்களை விவசாயம் செய்வதற்கு பாசன வசதி செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதுபற்றி தனிக் கேள்வி வேண்டும்.

திரு. க. மு. இராசகோபால் : தலைவரவர்களே, செய்யாற்றில் உத்தரமேரூருக்கு அருகில் கால்வாய்க்குக் கீழே இடமச்சியில் ஒரு அணை கட்டும் திட்டம் நீண்டகாலமாக பரிந்துரையில் இருந்துவருகிறது. இத் திட்டத்தை நிறைவேற்றினால் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஏக்கர் நிலம்—20, 30 ஊர்கள்—பாசன வசதி பெறும். செய்யாற்றின் தண்ணீர் இந்த ஆண்டு கூட வீணாகக் கடலில் போய் கலந்தது. ஆகவே, இத் திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அதுபற்றிய விபரம் இல்லை.

Kaveripoompattinam.

*** 402 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there are proposals under the consideration of the State Government to develop Kaveripoompattinam in Thanjavur district as a Major Port ?**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : No, Sir.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த அரசாங்கம் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தை துவக்க இருக்கிறது. ஆகவே, இந்தப் புகார் பட்டினத்தை மீண்டும் பழைய காலத்து—சோழர்கள் காலத்து துறைமுகம்போல மாற்றி அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒரு நல்ல ஆலோசனையை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இதுகுறித்து—இந்தத் துறைமுகத்தை மேம்படுத்துவது பற்றி ஏதாவது ஆய்வு செய்யப்பட்டுள்ளதா ? ஆய்வு நடத்தப்பட்டால் அதன்மீது என்ன முடிவு மேற்கொள்ளப்பட்டது ? வருவாய் பற்றிய விபரத்தை கணக்கிட்டிருக்கிறார்களா ? அதுபற்றிய விபரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி ஒன்றும் ஆய்வு செய்யபபடவில்லை.